தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

சுடர்: 4 சுக்கில ஞூ வைகாசி மீ 09 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 16 (22 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-141

# மக்கள் முறைப்பாடுகளை உடன் கவனிக்க உத்தரவு

## சகல அரச அலுவலகங்களிலும் இதற்கெனத் தனி உத்தியோகத்தர்

கொழும்பு, மே 22

பொதுமக்களின் முறைப்பாடுகளை உடனுக்குடன் கவனித்து, அவர்களுக்கு உள்ள குறைப்பாடுகளை தீர்த்துவைக்க வேண்டும் என்று சகல அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் திரு. சிறில்கமகே இது சம்பந்தமான விவரமான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பொது மக்களின் முறைப்பாடுகளை கையாளுவதற்கு, அரசாங்க அலுவலகம் ஒவ்வொன்றிலும் இதற்கெனத் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாடுகளை ஆராய்ந்து, அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஒவ்வொரு அரச அலுவலகத்திலும் பிரத்தியேக குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### ஊரடங்கும் தேடுதலும்

யாழ்ப்பாணம், மே 22

நேற்று சாவகச்சேரியைச் சேர்ந்த சரசாலை, மட்டுவில் பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

ஊரடங்கைத் தொடர்ந்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியின் உள்ளிட்ட பகுதிகள் அனைத்தும் தேடுதல் மேற்கொள்ளப் பட்டதாயினும் கண்டி வீதியூடான போக்குவரத்துகள் தடங்கலின்றி நடைபெற்றன. (ஒ-9)

### 1 முஸ்லிம் 3 தமிழருக்கு தேசிய விருது!

கொழும்பு, மே 22

இன்று தேசிய வீரர் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதை ஒட்டி 31 இலங்கையரை ஜனாதிபதி பிரேமதாஸ விருதுகள் வழங்கிக் கௌரவிக்கிறார்.

விருது பெறுபவர்களில் 3 தமிழர்களும் ஒரு முஸ்லிமும் உள்ளனர்.

அதி உயர் விருதான தேசமான்ய விருது முன்னாள் சட்டமா அதிபர் திரு. சிவா. பசுபதிக்கு வழங்கப்படுகிறது.

வெள்ளியிலான யானை அவருக்கு வழங்கப்படும்.

திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன், திருமதி கௌரீஸ்வரி ராஜப்பன் ஆகியோருக்கு கலாசூரி விருது வழங்கப்படுகிறது.

முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபராக இருந்த ஜனாப ஜெஸிமா இஸ்மாயிலுக்கு தேசபந்து விருது வழங்கப்படுகிறது. (ஒ-எ)

### உசனில் மூவர் கைது

யாழ்ப்பாணம், மே 22

கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் உசன் பகுதியில் அமைதிப்படையினர் மேற்கொண்ட தேடுதல்வேட்டையின் போது மூவர் கைது செய்யப்பட்டனர்.

அப்பகுதிகளில் விடுவீடாக இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளியும், சனியும் உசன் கந்தசுவாமி கோயிலில் தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

### ஆயுதக் கோஷ்டி கைவரிசை

யாழ்ப்பாணம், மே 22

கடந்த சனிக்கிழமை இரவு கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியிலுள்ள ஒரு வீட்டினுள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் அங்கிருந்த பொருள்களை அபகரித்துச் சென்றனர்.

வீட்டில் இருந்தவர்களை ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்திவிட்டு அவர்கள் அணிந்திருந்த நகைகளையும் வீட்டில் இருந்த மணிக்கூடுகள் உடுபுடைவைகள் என்பனவற்றையும் கொள்ளையடித்துச் சென்றனர் கொள்ளையர்கள். (ஒ-10)

### மானிப்பாயிலும் தேடுதல்

யாழ்ப்பாணம், மே 22

மானிப்பாய் பகுதியில் நேற்று நண்பகல் கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்களை அடுத்து தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

வீதியால் சென்ற பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

### காஞ்சிப் பெரியவரின் பிறந்த தினம்

சென்னை, மே 22

காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு பரமாசாரிய சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் 96 ஆவது பிறந்த தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

இதை ஒட்டி ஆலயங்களில் விசேட பூசைகள் நடத்தப்பட்டன. (ஒ-எ)

### இன்னும் விடுவிப்பு இல்லை

கொழும்பு, மே 22

மலையகத்தில் அண்மையில் கைது செய்யப்பட்ட நான்கு தமிழ்ப் பிரமுகர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

லக்கிலேண்ட் தோட்டத்தைச் சேர்ந்த திரு. பூமிநாதன், மலையக மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. பி. அருள்மொழி, திரு. எம். மெய்யழகன் ஹைபொரஸ்ட் தமிழ் வித்தியாலய ஆசிரியர் எஸ். உதயகுமார் ஆகியோரே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டது தெரிந்ததே. [ஒ-எ]

### சீனமாணவருக்கு அமெரிக்கா ஆதரவு!

வாஷிங்டன், மே 22

சீன மாணவரின் ஜனநாயக உரிமை கோரும் ஆர்ப்பாட்டத்துக்கு அமெரிக்கா ஆதரவளித்திருக்கிறது.

அமெரிக்கா பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தது இதுவே முதல் தடவையாகும். (ஒ-எ)

### நிலைமை கட்டுப்பாட்டில்

கொழும்பு, மே 22

சம்மாந்துறையில் நிலைமை கட்டுக்கடங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண நிதி அமைச்சர் திரு. பெ. கிருபாகரன் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் நேற்று சம்மாந்துறைக்குச் சென்று உயர்மட்ட மாநாடு ஒன்றை நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

### பல்கலைக்கழக மாணவன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

அமைதிப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக மாணவன் நேற்று விடுவிக்கப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட வர்த்தக பீட மாணவன் அழகராஜா ஜெகதீஸ்வரன் (திருமலை) கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கோண்டாவில், காங்கேசன்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பொருள்களை வாங்காது பகிஷ்கரிக்குமாறு ஜே.வி.பி. வேண்டுகோள்

கொழும்பு, மே 22

வருகிற ஜூன் 14ஆம் திகதி முதல் இந்தியப் பொருள்களை வாங்காது பகிஷ்கரிக்கும்படியும், இந்தியாவுடனான வர்த்தகத் தொடர்புகளைத் துண்டிக்கும்படியும் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோஹண விஜேவீரா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஆண்டு நிறைவு சென்ற 14ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

அதையொட்டி திரு. விஜேவீரா இந்தப் பகிஷ்கரிப்பு

(6-ஆம் பக்கம் பார்க்க)

## செல்லச்சாமி, தேவராஜ் யாழ்ப்பாணம் வருவர்

யாழ்ப்பாணம், மே 22

போக்குவரத்து இணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும், இந்து கலாசார அலுவல்கள் துணை அமைச்சர் திரு. பி. தேவராஜும் இம்மாத இறுதியில் யாழ் நகருக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

துணை அமைச்சர் திரு. செல்லச்சாமி தமது விஜயத்தின்போது போக்குவரத்து மற்றும் புனர்நிர்மாண வேலைகளை அவதானிக்க இருப்பதாக அறியவருகிறது.

துணை அமைச்சர் திரு-தேவராஜ் இந்து அலுவல்கள் சம்பந்தப்பட்ட அலுவல்களை ஆராய இங்கு வர இருப்பதாகவும் தெரியவருகிறது. (ஒ-3)

### முச்சந்தி முரளி



அப்ப அரசாங்க உத்தியோகக்காரர் துள்ளிஎழும்பி நேரத்துக்கு கந்தோருக்குப் போவினம் எண்டு சொல்லுங்கோ..!

## கரணவாய்ப் பகுதியில் மோதல்; இந்திய ஜவான்கள் 4 பேர் மரணம்

கரவெட்டி, மே 21

கரவெட்டியைச் சேர்ந்த கரணவாய்ப் பகுதியில் நேற்றுப் பகல் சுமார் 12-15 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

யார்க்கரு முகாமைச்சேர்ந்த படையினர் கரணவாய் குருக்கட்டு வீதிவழியாகவும்சோழங்கன் பகுதியூடாகவும் சென்ற சமயமே அவர்களுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் மோதியதாகத் தெரிய வந்தது.

இம்மோதலின்போது இந்திய அமைதிப்படை ஜவான்கள் நால்வர் மரணமானதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு, தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஷெல் வீச்சுச் சத்தங்களும் கேட்டன.

இதனால் பீதியுற்ற மக்கள் இடம்பெயர்ந்து ஆலயங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இப்பகுதிகளுக்கு மேலதிகமாகப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதனால் இப்பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது. இதற்கிடையில் சோழங்கனில்உள்ள எஸ். குலேந்திரன் என்பவரது வீடு சேதமாக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. (ஒ-70-160)

### 'துள்ளி எழும்ப' வைக்கும் இசை!

கொழும்பு, மே 22

காலையில் நேரம் பிந்தி நித்திரை செய்பவர்களை 'துள்ளி எழும்ப' வைக்கும் இசையை ஒலிபரப்பும்படி கல்வி அமைச்சர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் ரூபவாஹினிக்கும் உத்தரவிட்டிருக்கிறார்.

ஒலிபரப்பும் இசை படுக்கையில் இருப்பவர்களை துள்ளி எழும்ப வைக்கக் கூடியதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. (ஒ-எ)

### வெளியேற்றம்

மிருசுவில் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து தொடர்ந்து மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருப்பதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

அண்டிய பகுதிகளுக்கும், வடமராட்சிப் பகுதிக்கும் மக்கள் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-160)

### தேடுதல்

யாழ்ப்பாணம், மே 22

கோப்பாய் தபாற்கந்தோரை அண்டிய பகுதிகளில் நேற்றுத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

எவரும் கைதுசெய்யப்பட்டனரா என்பது குறித்துத் தெரியவரவில்லை. (ஒ-3)

### சுபநேரம்

22—05—1989

சுபநேரம்:
11. 52 முதல் 01. 22 வரை
ராகுகாலம்:
07. 22 முதல் 08.52 வரை

## சீனாவில் இரத்த ஆறு; எந்த நேரமும் ஓடலாம்!

### ராணுவ அறிக்கை பிரதிபலிக்கிறது

பீகிங், மே 22

சீன இராணுவத்தின் அறிக்கை ஒன்று பீகிங் தொலைக் காட்சியில் நேற்று இரவு வாசிக்கப்பட்டது.

நாட்டில் இரத்த ஆறு ஓடுவதை சீன இராணுவம் விரும்பவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வேறு விவரங்கள் அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்த சில மணித்தியாலங்களில் பீகிங்கில் திடீர் நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்றும்—

அதனால் இரத்த ஆறு ஓடும் அபாய நிலை அங்கு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் தென்படுவதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

## காணமற் போன 3 இளைஞர்

கொழும்பு, மே 22

தென் பகுதியில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று இளைஞர்கள் பின்னர் காணமற் போய் விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது

வெலிமட மத்திய மகா வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் ஏ. எம். பத்மலால் கடந்த மார்ச் 27 இல் பெற்றோரால் பண்டாரவளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் அந்த மாணவன் காணமற் போய்விட்டதாக அறிவிக்கப்பட்டதாக பதுளை பிரசைகள் குழுத் தலைவரான பிரபல சட்டத்தரணி பராக்கிரமசிகேரா தெரிவித்தார்.

இதேபோன்று வெலிமடையைச் சேர்ந்த சுனில் ரத்னயக்கா, பி. ஏ. சரத் ஆகிய இளைஞர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் காணமற்போய் விட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-எ)

## மாணவர் மதிய உணவில் பணிஸுக்கு இடமில்லை!

கொழும்பு, மே 22

வருகிற முதலாம் திகதியில் இருந்து பாடசாலை மாணவருக்கு மதிய உணவாக பணிஸ் வழங்க எந்தப் பாடசாலைக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

இப்படி கல்வித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் திருமதி ரி. காரியவாசம் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் மாவைப் பயன்படுத்துவதற்கு பதில் உள்ளூர் அரிசியைப் பயன்படுத்த வைப்பதே இதற்குக் காரணமாகும் என்றும் அவர் சொன்னார். (ஒ-எ)

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

மணமகன்: செல்வன் ரமேஷ்
மணமகள்: செல்வி லோஜினி

காலம்: 25 - 05 - 1989 வியாழக்கிழமை
பகல் 11.00 மணி 30 நிமிடம் முதல்
1.00 மணி வரை

இடம்: நல்லூர் சிவன் கோயில்

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. ரா. செந்திநாதன்
373, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

டாக்டர் திருமதி
வே சிவகுருநாதன்
109, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[11017]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

எம்மிடம் இரும்பு 13 அடி நீளம், 8 அடி உயரம், 3 டைமன்ட் போடப்பட்ட இரும்புகேட் பழயது. பழைய தாரம், ஏனைய பாவித்த பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னவி கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி, மானிப்பாய். (11016)

முட்டைக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. [Cull Birds] கிலோ 48 ரூபா. தொடர்பு: 39/5, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். [11013]

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origan Holland பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (555)

E. L. 9800 தொடர் இலக்கத்தில் A-50 ரக கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்; 67, ஸ்ரேஷன் வீதி, வவுனியா. [11007]

37ஸ்ரீ 3000 தொடர் டிறைக்டர் 240 Super 4, கியர்பெட்டி கலப்பையுடன் காட்சி அறை நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது: இந்திரன் எம் பயர் ஓட்டல், வவுனியா. T. P. No. 2370. (11001)

காட்டு விறகு விசேஷ மலிவு விற்பனை தூக்கு 55/- பத்து தூக்கு 500/ ஐயப்பன் விறகு டிப்போ 81, செட்டித்தெரு, நல்லூர். [11003]

### காணி விற்பனை

கோண்டாவில் இருபாலை வீதியில் மின் தறி ஆலைக்கு முன்னால் 20 பரப்புத்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- திருமதி வி.சிவசுப்பிரமணியம் C/o இ. முருகையா, புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு. (545)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (23-5-89) செவ்வாய்க் கிழமை விநியோகிக்கப்படும். பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50. முன்கூட்டியே பதிவு செய்க. இல:9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (551)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [519]

### மணமகள்தேவை

யாழ் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய அழகிய (ஜேர்மன் சிற்றிசன் கிரகபாவமற்ற A/L படித்த மணமகனுக்கு அழகிய பெண் தேவை. படிப்பு ஓரளவு என்றாலும் கவனிக்கப்படும். தொடர்பு: 525, C/o உதயன், யாழ்ப்பாணம். (556)

### மணமகன் தேவை

இந்து வேளாள 30 வயது O/L படித்த சிவந்த கன்னிப் பெண்ணுக்கு ஒழுங்கான கன்னி மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் யாழ்ப்பாணம் பஸ்நிலையம் - நாவலர் வீதி, [1/2மைலுக்குள்] வீடும், குறிப்பிடத்தக்க பணமும் நகையும். முதல்கடிதத்தில் சகல விபரத்துடனும் தொடர்பு கொள்க 528, C/o உதயன், யாழ்ப்பாணம் [564]

### தேவை

இரும்புக் கதிரை, மேசை தயாரிப்பதில் அனுபவம் உள்ள வெல்டர் தேவை. நிரந்தர வேலை. 22. 05. 89இல் நேரில் வரவும். United Engineers Central Workshop 271, Kachcheri Nallur Road, Nallur. [11002]

### ஒப்படைக்கவும்

தற்போது இயங்கிவரும் பெரியதபாற்கந்தோருக்குஅருகாமையில் சைக்கிள் நிறுத்தும் இடத்திலிருந்தோ அல்லது புகையிரத நிலையத்திலிருந்தோ, 19-5-89ல் சைக்கிளை மாறி எடுத்துச் சென்றவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உரிய சைக்கிளைஎடுத்துச் செல்லுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம். குகணேஸ் ரேடிங் 284, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (562)

Suzuki G.S 125 விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 120, சலீபா அப்துல் ஹமீட் வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம். (560)

### ராஜா மணி ஹோட்டல்

ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்து கொண்ட உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இத்தால் எமது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரியத் தருகின்றோம். எல். பக்கீர்சாமி தம்பதிகள், ராஜா மணி ஹோட்டல், 375, கஸ்தூரியார் வீதி. [649]

### திறப்புக்கள் காணவில்லை

ஐந்து திறப்புக்கள் பெரிதும் சிறிதுமாக லக்ஸ்பிறே பைக்குள் வைக்கப்பட்டிருந்தது. வவுனியா, யாழ்ப்பாணம் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது காணமற்போய் விட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் சேர்ப்பிக்கவும். தகுந்த சன்மானமும் வழங்கப்படும். 90/1, சட்டநாதர் வீதி, நல்லூர். [11015]

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

### FOR SALE

புத்தம் புதிய வீடியோ கமெரா விற்பனைக்கு உண்டு. Panasonic NV M51(5-VHS Movie) தொடர்பு கொள்ளவும்: கே. கே. எலற்றோனிக்ஸ் 27, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2619]

### ஜோதிடம்

[29-06-89) வியாழமாற்றம் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் முற்பிறவி வரலாறுகள் விலை ரூ 4/00 எங்கும் கிடைக்கும். நூலாசிரியர் [ஆத்மசோதிதத்துவஞானம்] சத்யதாசன், காங்கேசன்துறை, விநியோகஸ்தர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (548)


## காயம் அடைந்தோர்

யாழ்ப்பாணம், மே 22

புதனன்று கொடிகாமம் ஊடாகப் பயணம் செய்த சிலர் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

அவ்வழியாக வந்த மினி பஸ்கள், பஸ்கள், லொறிகள் மறிக்கப்பட்டு பயணிகள் ரயில் தண்டவாளம் வழியே நடக்க வைக்கப்பட்டனர்.

தாக்குதலில் காயமடைந்த இருவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சின்னத்தம்பி ராசரட்ணம் [வயது 28], சுப்பிரமணியம் இராசேந்திரம் [வயது 28] ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இருவரும் கொடிகாமத்தைச் சேர்ந்தவர்கள்.

● யாழ். இந்துக் கல்லூரியில்

# திருமுறை மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்து இளைஞர் கழகம் நடத்தும் நான்கு நாள் திருமுறை மாநாடு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இன்றைய முதல் நாள் நிகழ்ச்சிகள் காலை எட்டு மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து தொடங்கும் திருமுறைச் சுவடிகள் ஊர்வலத்துடன் ஆரம்பமாகும்.

பிரஸ்தாப திருமுறைச் சுவடி ஊர்வலத்தில் நல்லை ஞானசம்பந்தர் ஆதினத் திருமுறை மன்றம், ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையிலான பஜனைக்குழு, அகில இலங்கைத் திருமுறை மன்றம், இந்துக் கல்லூரி இந்து இளைஞர் கழக பஜனைக்குழு உட்பட மற்றும்பல பஜனைக்குழுக்கள் பங்குபற்றுகின்றன.

திருமுறைச் சுவடிகள் விழா மண்டபத்திற்கு வந்து சேர்ந்ததும் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞான வைரவப் பெருமானுக்கு பூசை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து, கல்லூரி அதிபர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

''இந்துசாதனம்'' ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் நந்திக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். யாழ். கல்விக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா மங்கள விளக்கேற்றுவார்.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும், யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபால கிருஷ்ணனும் ஆசியுரை வழங்குவார்கள்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசா வாழ்த்துரையும், இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் வரவேற்புரையும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து திருமுறைத்தொகுப்பு நூல் வெளியிட்டு வைக்கப்படும். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் முதற் பிரதியை வாங்குவார்;

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், புலவர் ஈழத்துச் சிவானந்தனும் சிறப்புச் சொற்பொழிவுகள் அற்றுவார்கள்.

விழாவில் திருமுறைப் பண்ணிசையும், பஞ்சபுராணம் ஓதுதலும் நிகழும். (அ)

# ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக கிரிக்கெட் போட்டி முடிவுகள்

## பல்கலைக்கழக - சென்றலைட் [நீல], சென்றலைட் [சொக்] அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், மே 22

ஷப்றுநிற்நிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ்டார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கடந்த சனிகாலை ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய பல்கலைக்கழக அணி வெற்றியீட்டியது. இந்தப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 30 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

ஆர். மகிந்தா 40, கே. கணேசநாதன் 24, எஸ். அகஸ்டீன் 23, வை. முரளிதரன் 13, ஜெ. அன்டன் ராஜகாரியர் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் எஸ். பிரகாஸ் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், க. இளங்கோ, எஸ். வரதன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பின்னர் ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் அணியினர் 24 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர்.

என். கோபிராஜ் 29, எஸ். வரதன் 16, ஆர். சசிசேகரம் 19, எஸ் திலீபன் 11 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் எம். பரமலிங்கம், ஆர். மகிந்தா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், வை. முரளிதரன், கே. அகிலன் ஆகியோர் தலா 13 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

**சென்றலைட் (நீல) அணிவெற்றி**

சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மூத்தவிநாயகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய சென்றலைட் (நீல) அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 30 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

சிறீசங்கர் 71 ஓட்டங்களையும், சதீஸ்காந்தன் 26. சசிதரன் 19, உதயகுமார் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரகு, நகுலேஸ்வரன், சுதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சுரேஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய மூர்த்தவிநாயகர் அணி 30 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 85ஓட்டங்களைப்பெற்றது சுதன் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ராஜ்குமார், போர்னூட் ரமேஷ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், சசிதரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

**சென்றலைட் (சொக்) அணி வெற்றி**

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் கிறுஸ்கொப்பர்ஸ் அணியை எதிர்த்து ஆடிய சென்றலைட் (சொக்) அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட் அணி 25.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

ரஜீவன் 31, புரட்சிதாசன் 23, முகுந்தன் 14, சண்முகலிங்கம் 11 ஓட்டங்களையும்

(6-ஆம் பக்கம் பார்க்க)


மட்டுவில் வடக்கு

ஆரோக்கிய வாசக வைத்தியசாலையின்

25 ஆண்டு சேவை

# வெள்ளி விழாவும்

வைத்தியர் பே. பிலிப்ஸ் J.P.

அவர்களின்

# மணி விழாவும்

23 - 05 - 1989

★ மரம் நாட்டு வைபவம்
★ மருத்துவ ஆய்வரங்கு
★ மலர் வெளியீடு
★ மாணவர் உதவித்திட்டம்
★ விதவைகள் உதவித்திட்டம்
★ பொதுக் கூட்டம்

இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக்கள் யாவருக்கும் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

—விழாக்குழுவினர்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (603)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

திரு. சின்னத்தம்பி சிவஞானரத்தினம்

(சின்னராஜா S. S. R.)

மண்ணிற்கு: 17 - 01 - 1927
விண்ணிற்கு: 08 - 06 - 1982

திதி: துதியை 22 - 05 - 1989 (திங்கட்கிழமை)

அன்பின் திருவுருவே அறிவின் பிறப்பிடமே பண்பின் உறைவிடமே பாசத்தின் சிகரமே எம் அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து ஏழாண்டு சென்றாலும் உங்கள் திருவுருவம் எம்மை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்.

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள், ஊழியர்கள்.

'செல்வவாசா'
ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [640]


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI

**Diploma in Computer Programming and Data Processing**

July 89 இல் மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்

காலம்: One Year Full Time

Subjects:-

1. DATA PROCESSING
2. FUNDAMENTALS OF COMPUTER-TECHNOLOGY
3. SYSTEM ANALYSIS, DESIGN AND DEVELOPMENT OF INFORMATION PROCESSING SYSTEM
4. BASIC PROGRAMMING
5. COBOL PROGRAMMING
6. D BASE III + PROGRAMMING
7. ACCOUNTING SYSTEM

**Practicals on I B M P C, I B M at and Mat 386 Industrial Controller**

Syllabus Covers City & Guilds (London) Examination & Partly for British Computer Society

● HOSTEL, LIBRARY, GAMES & OTHER FACILITIES

கட்டணங்கள் தவணை அடிப்படையில். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


CLOSING DATE: 15-06-89

Selection After Interview

**- DIRECTOR.**

[C-2615]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில்: 15 - 10 - 1969

இறைவனடியில்: 22 - 05 - 1988

திதி: 09. 06.1989

சு. கனகசுந்தரலிங்கம் [வெள்ளை]

காலம் ஓடியதடா
ஓராண்டு
காணமல் கதறுகின்றோம்
நாம் புரண்டு
காணப் புறப்பட்டாய்
தமிழ்
காணமல் போனது உன்
பொன் உடல்
அண்ணாவை இழந்தாய்
முருங்கனில்
அம்மாவை காணவந்தாய்
அன்பாக
அருகில் வந்து கொடுத்தாய்
ஓர் முத்தம்
அப்பொழுது தெரியவில்லை
கடைசிதான் என்று
கடைசியாகப் பிறந்தாய்
நீ எமக்கு
கடவுளுக்கும் பொறுக்கவில்லை
உன் சுமப்பை
வாடுகின்றோம் தேடுகின்றோம்
உன் வண்ண முகத்தை.

அன்பு நிறைந்த அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார், அண்ணிமார்,
அத்தான்மார், மருமக்கள்,
பெருமக்கள், அப்பாச்சி.

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதிகளுக்கு 10லட்சம் ரூபா செலவில்

# அம்புலன்ஸ் படகுச் சேவை

அனலைதீவு, மே 22

1989-ஆம் ஆண்டுக்கான புனர்வாழ்வு புனர்நிர்மாண நிதியிலிருந்து ஓர் புதிய மோட்டார் அம்புலன்ஸ் படகுச் சேவைக்கு 10லட்சம் ரூபா அரசாங்க அதிபரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனலைதீவு, நயினாதீவு வைத்திய சாலைகளுக்கான புனர்வாழ்வு புனர்நிர்மாண நிதியையும் அரசாங்க அதிபர் ஒதுக்கியுள்ளார்.

அனலைதீவு வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி விடுதி திருத்த வேலைகளுக்கு 10ஆயிரம் ரூபா.

குடும்பநல சேவையாளர் விடுதி திருத்த வேலைகள் ரூபா 2ஆயிரம்.

இரண்டு மருந்து கட்டும் அறைகள் நிர்மாணிக்க ரூபா 3 லட்சம்.

மதில் சுவர் அமைக்க ரூபா 30ஆயிரம்.

குளிர்சாதனப் பெட்டிக்கு ரூபா 10ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளன.

நயினாதீவு வைத்தியசாலை கட்டிடத் திருத்த வேலைக்கு ரூபா 25 ஆயிரம்

இரு மல கூடங்கள், வேலி அமைக்க 19 ஆயிரம்

மலகூடத்திருத்த வேலைக்கு ரூபா 10 ஆயிரம்

குளிர்சாதனப் பெட்டிக்கு ரூபா 10 ஆயிரம், 30 இரும்புக் கட்டில்கள் அமைக்க ரூபா 65 ஆயிரம், சத்திரசிகிச்சை உபகரணங்களுக்கு ரூபா 10 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் மேற்படி வேலைகள் செய்துமுடிக்கப்படவுள்ளன. (இ-18)

## கோதுமை அன்பளிப்பு

ஒன்றரைக்கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான கோதுமையை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்று அமெரிக்க சிறீலங்கா பிரதிநிதிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

சிறீலங்கா அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கமும், அமெரிக்காவின் சார்பில் தூதர் ஜேம்ஸ் டபிள்யு. ஸ்பெயினும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள்.

இந்த உடன்படிக்கையின் படி, அமெரிக்கா சுமார் 75 ஆயிரம் தொன் அமெரிக்கக் கோதுமையை வாங்க சிறீலங்காவுக்குக் கடன் உதவி வழங்கும்.

கோதுமை மாவை உள்ளூரில் விற்பதால் வரும் தொகையில் ஒரு பகுதியை, அதாவது ஒருகோடி டாலர் பணத்தை சிறீலங்கா அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் புனர்நிர்மாண, புனருத்தாரணவேலைக்குப் பயன்படுத்தும்.

மிகுதிப் பணமான 50 லட்சம் டாலர் வரட்சியால்பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும். (க)

## சீனி வந்தது!

'கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம் தாய்லாந்திலிருந்து 12 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனியை இறக்குமதி செய்துள்ளது. இதில் 2 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் சீனி கப்பலில் இருந்து இறக்சப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இப்பொழுது சில்லறை விற்பனை நிலையங்களுக்குட் போதுமான சீனி அனுப்பப்பட்டுள்ளது. தட்டுப்பாடு ஏதும் இல்லை.

கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபன உதவிப்பொது முகாமையாளர் திரு. லஷ்மன் கினிகம மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

இப்பொழுது சீனி கிலோ ஒன்று மொத்த விலையாக 21 ரூபா 25 சதமாகவும் சில்லறை விலை 22 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

சீனி இறக்குமதியாளர் சங்கத் தலைவர் திரு. கரு ஜெயசூரியா கருத்துத் தெரிவிக்கையில்—

தற்காலிகமாக ஏற்பட்ட சீனி பற்றுக்குறையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு சிலர் சீனியின் விலையை உயர்த்தியுள்ளனர். இப்பொழுது போதிய அளவுசீனி இருப்பில் உள்ளது என்று கூறினார். (ஒ-ச)

## குருநகரில் மின்தடை

குருநகர், மே 22

குருநகர்ப் பகுதியில் கடந்த சில தினங்களில் அடிக்கடிமின் தடை ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [க-51]

## கந்தப்பளைப் பிரச்சினை தொடர்கிறது

நுவரெலியா, மே 22

கந்தப்பளையில் அதிபர் நியமனம் பற்றிய பிரச்சினை தொடர்ந்து நிலவுகிறது.

கந்தப்பளை மாணவர்களின் பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கடந்த வாரத்தில் அட்டன் புனிதஜோன் பொஸ்கோக் கல்லூரிமாணவர்களும் தலவாக்கொல்லை தமிழ் மகாவித்தியாசாலை மாணவர்களும் வகுப்புகளுக்குச் செல்லாது பகிஷ்கரித்திருந்தனர். (இ-68)

## தொழில் நுட்ப கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 22

காலி தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பகிஷ்கரிப்பொன்றில்குதித்துள்ளனர்


# "டினெஸ்ரி" போலவே, பரம்பரைப் புகழ் வாய்ந்தவை.

**சிங்கர் ஓடியோ/வீடியோக் கருவிகள்.**

சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் போலவே, உள்ளூர் விற்பனைச் சந்தையின் பெரும் பங்கைப் பிடித்து வருகின்றன, சிங்கர் ஓடியோ/வீடியோ வரிசை ஒளிப்பதிவுக் கருவிகள், ஒலிப்பதிவுக் கருவிகள்.

சிங்கர் எஸ்வி 300 விசிஆர், ரீடபிள்யூபி 7075, ரீஎஸ்ஆர் 855, ரீஎஸ்ஆர் 785 ஒலிப்பதிவு, ஒளிப்பதிவுக் கருவிகள்

அவற்றின் தரமுயர்ந்த ஒலி, ஒளித் தொழில் நுட்பத்துக்காகவே விரும்பி வாங்கப்படுகின்றன. ஒலிக்கும் ஒளிக்கும் அவை யதார்த்தமான, தெளிவான, தரமுயர்ந்த புதிய பரிமாணங்களை வழங்குகின்றன. மாசற்ற அற்புதமான படங்கள், தொனிகள். இவற்றுடன் சிங்கர் நாமத்துக்கேயுரிய உன்னதச் சிறப்புகள்.




# சிங்கர்

ஓடியோ/வீடியோ கருவிகள்

**சிங்கர்***

மாசற்ற மேன்மை

...செயற் சிறப்பு.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. I. M. A
Stage I

A. A. T
Prelim

I. D. P. M
part I
&

I. A. B
Foundation

27th May 1989

C. I. M. A
Stage II & III

A. A. T
Inter & Finals

I. D. P. M
Part II
&

I. A. B
Inter & Finals

3rd June 1989

**North Ceylon Technical Institute**

14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.

[இ-2580]



அரபு நாடுகளில்

**பணிப் பெண்களுக்கு**

**★ வேலைவாய்ப்பு ★**

**சவூதி அரேபியா**

வயது 30 முதல் 40 வரை
வாரத்தில் இரண்டு நாட்கள் விமானப் பயணம்

**குவைத், டுபாய், அபுதாபி, சார்ஜா, ராஸ் அல்கைமா, அல் எயின்**

ஆகிய நாடுகளுக்கு 10 நாட்களில் வேலை வாய்ப்பு
வயது 18 முதல் 35 வரை
சம்பளம் 3500/- முதல் 4000/- வரை
சாப்பாடு, தங்குமிட வசதி இலவசம்
பாஸ்போர்ட், பாஸ்போர்ட் சைஸ் படம் 5, வர்ண முழுஉருவப் படம் 2 ஆகியவற்றுடன் உடனடியாக சமுகமளிக்கவும்.

சமுகமளிக்க வேண்டிய விலாசம்:

**ஸ்கொயார் டீல்ஸ்**

141, செட்டித்தெரு,
(டயமன் ஹவுஸ் மேல் மாடி)
கொழும்பு - 11

தொலைபேசி இல: 3632
அனுமதிப் பத்திர இல: 85
அங்கீகாரம் ஒ. எல். 85 - 03 - 89
ஒ. எல். 85 - 02 - 89

● எங்களது காரியாலயத்தின் மூலமாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு செல்வோருக்கு இன்சூரன்ஸ் வசதி செய்து தரப்படும்.

யாழ் நகரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**எஸ். எஸ். பாலன்**

இல 131, கலா சோடா கம்பனி,
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

[10991]


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

22. 05. 1989)



**கந்தசாமி காந்தரூபன்**
(காந்தன்)

மலர்வு: 08. 10. 1970
உதிர்வு: 08 04. 1989

எங்கள் அன்புச் செல்வன் காந்தன் அவர்களின் மறைந்த 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நினைவு கூரும் இந்நாளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்,

தந்தை, தாய்,
சகோதரிகள், உறவினர்கள்.

'காந்தீபம்',
டச்சு வீதி,
சித்தங்கேணி.

(627)

# ஐ.தே.க. அரசு தொழிலாளரின் லீவை குறைக்க திட்டமிடுகின்றது

## தொழிற் சங்க செயலாளர் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 22

'ஏற்றப்பட்ட மேதினக் கொடிகள் இறக்கப்படுவதற்கு முன்பே ஐ. தே. க. அரசு உழைப்பாளி மக்களுக்கெதிரான தனது வர்க்க குணத்தை வெளிக்காட்டி விட்டது. அரச ஊழியர்களின் பொது விடுமுறை நாட்கள், வருடாந்த விடுமுறை நாட்களை குறைப்பது பற்றிய பொது நிர்வாக ராஜாங்க அமைச்சர் திரு. சந்திராபண்டாராவின் அறிவித்தல் அரச ஊழியர்களுக்கு மட்டுமல்ல ந்த நாட்டின் சகல பாட்டாளி மக்களுக்கும் பெரும் துரோகமாகும்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் வடபிரதேச செயலாளர் திரு. எம். ஏ. சி. இக்பால் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்று அரச ஊழியர்களின் லீவுகளை குறைக்க முயலும் அரசு விரைவில் தனியார் துறை, கூட்டுறவுத்துறை ஏனைய துறைகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் லீவுகளையும் குறைக்க முற்படும்.

ஆகவே அரசின் இந்த நடவடிக்கைகளை சகல தொழிலாளர்களும் ஐக்கியப்பட்டு எதிர்க்க வேண்டும்.

ஐ.தே.க. அரசுக்கு கடன் வழங்கும் நாடுகள் அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்களின் லீவுகளை வெட்டும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அரசு இந்த முடிவுக்கு வந்துள்ளது

கடந்த பட்ஜெட்டின் மூலம் விலைவாசிகளை உயர்த்தி மக்களின் வயிற்றில் அடித்த இந்த அரசு இன்று லீவிலும் கைவைத்துள்ளது என்று அறிக்கை மேலும் கூறுகின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மீளப் பெறும் தொகை அதிகரிப்பு

மட்டக்களப்பு, மே 22

தபால் நிலையங்கள், உப தபால் நிலையங்களில் சேமிப்பு மீளப்பெறும் தொகை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை தபால் நிலையங்களில் சேமிப்புக் கணக்கில் இருந்து ஒரே தடவையில் ரூபா 500 உம் உபதபால் நிலையங்களில் ரூபா 200 உம்பெற முடியும்.

இத் தொகை தற்போது முறையே ரூபா. 1000, ரூபா 300 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ச- 21)

## இன்று கூட்டம்

யாழ்-மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் ஒன்றை யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் நடத்துகின்றது.

கால்நடை நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இறைச்சி வியாபாரம், சட்டவிரோத திடீர் இறைச்சிக் கடைகள் ஆகியன சம்பந்தமாக சில தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (க-51)

## ஆசிரியர் சம்பளம்

மானிப்பாய், மே 22

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதால் இக்கோட்டத்துக்குள் வரும் மானிப்பாய், கோப்பய் கல்வி வட்டார பாடசாலை ஆசிரியர்களுக்கான ஜூன் மாதச் சம்பளம் அங்கிருந்தே வழங்கப்பட உள்ளது.

பாடசாலை அதிபர்களை மே மாதத்துக்கான சம்பளப் பட்டியலையும், ஜூன் மாதத்துக்கான புதிய சம்பளப் பட்டியலையும் மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் அறிவித்துள்ளார். (இ-90)

## நிரந்தரமாக்க நடவடிக்கை

யாழ். மாவட்ட பாடசாலைகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியிலும், வசதிகள் சேவைகள் கட்டண நிதியிலும் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக தெரியவருகிறது.

இந்த நோக்கத்திற்காக அவ்வாறான ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தால் திரட்டப்படுகின்றன. (இ-27)

## முல்லைத்தீவில் உணவு முத்திரை

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் மற்றும் பணிமனை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் துரித நடவடிக்கை காரணமாக உணவுமுத்திரைகள்யாவும் கிராம சேவை உத்தியோகத்தர்கள் மூலம் மக்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்பட்டு விட்டன.

(இ- 92)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. க. கணேசு (ஆசிரியர்)**

தோற்றம்: 01 - 04 - 1940
மறைவு: 13 - 04 -1989

மணமாலை சூடும் திருநாளை எண்ணி
காத்திருந்தேன் இரு தசாப்தங்களாய்,
அந்தத் திருநாளின் பின்பு ஓர் விம்மல்
கூடத் தெரியவில்லை, நீர் சுமைதாங்கி
நின்றதனுல் — இன்றோ
நீர் ஓடி ஒழிந்து கொண்டீர் அக்கரைக்கு
ஓர் தசாப்தமாவதற்குள், அதனுல்
விக்கல் அல்ல நெஞ்சமே குமுறுதையா,
ஆருயிராய் வளர்க்கும் அந்த ஒருயிரும்
நானும் தடுமாறுகின்றோம், இக்கரையில்
ஒன்றுமே புரியவில்லை
எமக்கது விளங்கவில்லை - எனவே இனி
ஓடுவோம் ஒதுங்குவோம் ஓர் ஓரத்தை நோக்கி

நாளை செவ்வாய்க்கிழமை 23 – 05 – 89 எமது இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

உன் ஆத்மா சாந்தி அடைய, ஆண்டவனைப் பிரார்த்திக்கும்.

மனைவி: மனோன்மணி,
மகன்: ராஹீஸ்.

சந்தா தோட்டம்,
புலோலி.

[642]

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு**
(கண்ணன் — கோண்டாவில்)

தாயின் மடியில்: 14 – 05 – 1970
தாயகமண்ணில்: 12 – 04 – 1989

இளவயது முதற்கொண்டு
இன் தமிழர் நலம் பேண
உறுதியோடு புறப்பட்டவனே - நீ
தாய்மண்ணுக்காய் மடிந்து விட்டாய்
பாசம்மிகு உன்பணிக்கு தலை சாய்க்கிறோம்.

- நண்பர்கள்.

கோண்டாவில் கிழக்கு.

[650]

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் ஆத்ம சாந்தி அழைப்பும்



குரும்பசிட்டி

**அமரர் செல்லையா நவரத்தினம்**
(நியூ அம்பாள் ஸ்ரோர், உடையார்கட்டு)

மறைவு:
08. 04. 1989

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய்... பாசத்தின் உறைவிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய்... ஒளி வீசி இறைபதம் சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 23. 05. 89 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி:
தர்மவதி - நவரத்தினம்,
பிள்ளைகள்.

குரும்பசிட்டி,
தெல்லிப்பழை.

(11005)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பகேஸ்வரி இராசையா**

திதி: 22 - 05 - 1989


என்றென்றும் உங்கள் நினைவு எம் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கும்.

உம் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்,
உற்றார், உறவினர்கள்.

நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில்

(11009)

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

**கணபதிப்பிள்ளை சோதிநாதன் [சோதி]**

மண்ணுலகு: 18- 09- 1957
விண்ணுலகு: 02- 06- 1988

திதி- 22- 05- 1989

பாசத்தின் இருப்பிடமே!
அணையாத எங்கள் அகல் விளக்கே!
மங்காத சோதியே!
உமது ஆத்மா சாந்தியடைய நிதமும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்
நண்பர்கள்.

பகவதியார் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

**பொருள்:**

முன் உண்ட உணவு செரித்து விட்டால், பின் வேண்டிய அளவு அறிந்து உண்ணவேண்டும்; அதுவே உடம்பு பெற்றவன் அதை நெடுங்காலம் செலுத்தும் வழியாகும்.


# உதயன்

இல. 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
22 - 05 - 1989 த. பெ. இல. 88


## பகல் நேரப் படக்காட்சி

பகல் நேரத்தில், பாடசாலை நடக்கும் வேளையில், பள்ளிச் சீருடையில் சினிமாப்படம் பார்க்கச் செல்லும் மாணவர்கள் பாடசாலையில் இருந்து விலக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக தகவல்துறை துணை அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்கா அறிவித்திருக்கிறார்.

பாடசாலை நேரத்தில், மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் பகல் நேரப் (மெட்னி) படக்காட்சி கண்டு களிக்கச் செல்வது நீண்ட காலப்பிரச்சினை. வீட்டில் பெற்றோர் பிள்ளை பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருக்கிறது என்று நினைத்துக்கொண்டிருக்க, பிள்ளையோ படமாளிகையில் திரைப்படத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்கும், பாடசாலையில் ஆசிரியர், மாணவர் ஏதோ காரணமாக வகுப்புக்குச் சமுகமளிக்கவில்லை என்று நினைத்துவிட்டு அதனைப் பற்றி அக்கறைப்படாமல், அடுத்தநாளாவது விசாரணை செய்யாமல் விட்டுவிடுவார்.

பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் ஏமாற்றுவதாக நினைத்து, பகல் நேரப் படக்காட்சி பார்த்த மாணவர்கள், பிற்காலத்தில் தம்மைத் தாமே ஏமாற்றியதை, தமது வாழ்க்கையை ஏமாற்றியதை உணர்ந்து கவலைப்படுவது உண்டு!

ஒரு நாளைக்குப் பகல் நேரப் படக்காட்சி பார்த்து ருசி கண்ட மாணவனுக்கு, அடிக்கடி திரைப்படக்காட்சிச்சாலைக்கு செல்ல வேண்டும் என்று மனம் தூண்டும். பருவக் கோளாற்றினால் உண்டாகக்கூடிய வேண்டாத ஆசைகளுடன், மனத் தூண்டுதலுடன் அவன் அடிக்கடி பாடசாலைக்குச் சமுகமளிக்காது திரைப்படசாலை செல்லப் பழகுகிறான். அதனால் அவனது கல்வி பாதிக்கப்படுகிறது; பாழடிக்கப்படுகிறது. மொத்தத்தில் தானே தனது வருங்கால வாழ்க்கைக்கு மேல் மண் மூடிப் புதைத்து விடுகிறான் அந்த மாணவன்.

திரைப்பட சாலைகள், இப்போது வந்துள்ள ''மினி சினிமா'' சாலைகள் ஆபாசப்படங்களை, கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்தக் கூடிய மட்டரகப் படங்களைக்காண்பித்து மாணவர் கல்வியை— அவர்தம் எதிர்கால வாழ்க்கையை — பாழாக்கத் துணை போகின்றன.

பாடசாலைப் படிப்பின்போது பகுதிநேரமாக இருக்கும் ''ரியூட்டரி''க் கல்வி, பொதுப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றியதும், பாடசாலையைவிட்டு விலகியதும், முழு நேரக் கல்வியாகிறது. முழுநேர ''ரியூட்டரி''க் கல்விக்குப் புறப்படும் மாணவர்களின் பகற்பொழுதில் பெரும்பகுதி திரைப்பட சாலைகளிலும், மினி சினிமா சாலைகளிலும் தான் கழிகிறது. இதனை யாழ்ப்பாண நகரில் அன்றாடம் கண்ணாரக் காணக்கூடியதாக இருக்கிறது.

பல பெற்றோர்கள் தாங்கள் ஏமாற்றப்படுவது குறித்தும், தமது பிள்ளைகளின் எதிர்காலம் பாழடிக்கப்படுவது குறித்தும் வேதனைப்பட்டு, நெஞ்சநீர் கொட்டுவது மறைக்கக் கூடியது அல்ல. பருவத்தே பயிர் செய்யாமல், இளமையில் கல்வியை உரிய முறையில், வேண்டிய அக்கறையுடன், சரிவரக் கற்காத மாணவர்கள், பிற்காலத்தில் சமூகத்துக்குப் பெரிய பாரமாக இருக்கப் போகிறார்களே என்ற சமூக வேதனையையும் ஒளித்து விடமுடியாது.

மாணவர் கல்வியும், ஒழுக்கமும் திரைப்படங்கள் பார்ப்பதால் கெட்டுப்போகாமல் தடுப்பதற்கு சீருடையில் பகல் நேரக் காட்சிக்குச் செல்லும் மாணவ, மாணவிகளை பாடசாலையில் இருந்து நீக்குவது என்பது ஆகக் கடைசியாகக் கொடுக்கப்படவேண்டிய தண்டனை.

அதற்கு முதலில், பகல் நேரத்தில் சீருடையுடன் மாணவர்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்கி அனுமதிக்கும் திரைப்பட சாலைகளையும், ''மினி சினிமா'' சாலைகளையும் தண்டிக்க வேண்டும். அவற்றின் தொழில் உத்தரவுப் பத்திரங்களை ரத்துச் செய்ய வேண்டும். தடையை மீறி சீருடையில் மாணவ மாணவிகள் திரைப்படசாலைகளுக்குள் அனுமதிக்கப்படுகிறார்களா என்பதை அடிக்கடி சோதனையிட்டுக் கண்காணிக்க வேண்டும்.

ஆபாசப் படங்களையும், மற்றும் பாலியல் படங்களையும் தடை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில், மாணவர் விடயத்தில் திரைப்பட சாலைகள் மிகப் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளக் கூடிய விதத்தில் அவற்றைக் கண்காணித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

## பி.பி.சி உலக சேவைக்கு ஆபத்து; நிதி நெருக்கடி காரணமாம்!

லண்டன், மே 22

பி. பி. சி பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

செலவினம் அதிகரித்துள்ள காரணத்தால் 37 மொழிகளில் உலக செய்தி ஒலிபரப்புக்களை தொடர்ந்து நடத்துவதற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக பி. பி. சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

தரமான ஒலிபரப்புக்களை நடத்தக் கூடுதல் நிதி தேவை என்று பி. பி. சி உலக சேவை நிர்வாக இயக்குநர் ஜோன் ருஸா சொன்னார்.

பி. பி. சி உலக சேவைக்கு உலகம் முழுவதும் பன்னிரண்டு கோடி நேயர்கள் உள்ளனர். இச்சேவையை நிர்வகிக்க பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு நிதி உதவி அளிக்கிறது. (எ)

# சீனமாணவருக்கு ஆதரவுஅதிகரிப்பு
# இராணுவச் சட்டம் புறக்கணிப்பு!

பீகிங், மே 21

ஆர்ப்பாட்டம் நடத்தும் சீன மாணவர்களைப் பாதுகாக்க லட்சக்கணக்கான தொழிலாளர் மற்றும் பொது மக்கள் சீனாவின் பல மாகாணங்களில் இருந்தும் பீகிங் நகருக்குள் வந்து கொண்டிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

சீன அரசு நேற்று பிறப்பித்த இராணுவச் சட்டத்தை அமுல் நடத்த சீன மக்கள் இராணுவத்துக்கு பிரதமர் லீ பெங் உத்தரவிட்டிருக்கிறார்.

அதைத் தொடர்ந்து 50 கவச வண்டிகளில் சீன இராணுவத்தினர் பீகிங் நகரில் தெற்கு மற்றும் வடக்கு பகுதிகளில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஜனநாயகத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டத்தை கலைக்க இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் இராணுவத்தினர் இன்னும் நடவடிக்கையில் இறங்கவில்லை.

இராணுவச் சட்ட உத்தரவை மக்கள் புறக்கணித்து விட்டனர்.

நகர வீதிகளில் பல தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட செய்தியை பீகிங் வானொலி அடிக்கடி ஒலிபரப்பிக்கொண்டிருந்தது

### பதவி ஏற்க மூப்பனார் மறுப்பு

சென்னை மே 21

அகில இந்திய காங்கிரஸ் கட்சி (இ) யில் எந்தப் பதவியும் வகிக்கத் தாம் தயார் இல்லை என்று ஜி. கே. மூப்பனார் தெரிவித்துள்ளார்.

கட்சியின் துணைத் தலைவர் அல்லது பொதுக் காரியதரிசிப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு கட்சித் தலைவர் ராஜீவ் காந்தி விடுத்துள்ள வேண்டுகோளை மூப்பனார் மறுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது. (க)

### இந்தியாவிடம் ஹைட்ரஜன் குண்டு அமெரிக்க சி. ஐ. ஏ. தகவல்

வாஷிங்டன், மே 21

இந்தியா ஹைட்ரஜன் குண்டு தயாரித்து வருவதாக சி. ஐ ஏ. என்று அழைக்கப்படும் அமெரிக்க உளவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க செனட்கமிட்டி ஒன்றின் முன் ஆஜராகி அமெரிக்க சி. ஐ. ஏ. தலைவர் திரு. வில்லியம் வெப்ஸ்டர் இத் தகவலை வெளியிட்டார்.

இந்தியாவில் அணு ஏவுகணைத் தயாரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் இந்திய விஞ்ஞானி திரு. அப்துல்கலாம் என்பவர் 1960களில் அமெரிக்காவில் வேர்ஜினியா ரொக்கெட் தயாரிப்பு நிலையத்தில் பயிற்சி பெற்றவர்.

இந்தியாவின் பிருத்வி, அக்னி ஆகிய ஏவுகணைகளை தயாரித்ததில் திரு. கலாமுக்கு முக்கிய பங்கு உண்டு.

இப்படி திரு. வெப்ஸ்டர் தெரிவித்தார். (எ)

### ஜப்பானியர் வேலைக்காக வாழ்ந்து வேலையால் இறக்கின்றார்கள்

டோக்கியோ, மே 21

''உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது அளவுக்கு மீறி வேலை செய்யும் ஜப்பானியர்களின் மனோபாவம் அசாதாரணமானதாக இருக்கின்றது. அளவுக்கு மீறி வேலை செய்வதால் மரணங்கள் ஏற்படுவதைத் தடுக்க ஜப்பானியத் தொழிலாளர்களுக்கு ஒழுங்கானமருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படவேண்டும். அவர்கள் தயங்காமல் லீவு எடுக்க வேண்டும்''

ஜப்பானின் கியோட்டோப் பல்கலைக்கழகத்தில் அளவுக்கு மீறிய வேலையால் ஏற்படும் மரணங்கள் பற்றி ஆய்வு ஒன்றை நடத்தும் டாக்டர் தக்கெஷி யொசினுக்கா மேற்கண்டவாறு கூறினார்.

ஜப்பானியர்கள் வேலைக்காக வாழ்ந்து வேலையால் இறக்கும் நிலைமை பலரின் அக்கறையை எழுப்பியுள்ளது. (க)

## பாகிஸ்தானுக்கு மீண்டும் ஆப்கன் அரசு எச்சரிக்கை!

காபூல், மே 21

பாகிஸ்தானில் உள்ள ஆப்கன் கெரில்லாக்கள் முகாம்கள் மீது தாக்குதல்களை நடத்தப் போவதாக காபூல் அரசு நேற்று எச்சரித்தது.

ஆப்கனிஸ்தானில் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து ஆயுத உதவிகள் அளித்துவரின், பாகிஸ்தானுக்குள் ஊடுருவி கெரில்லாக்கள் முகாம் மீது ஆப்கன் படைகள் தாக்குதல் நடத்துவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று ஆப்கன் தலைவர் டாக்டர் நஜிபுல்லா தெரிவித்தார்.

ஆனால் கெரில்லாக்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவியளிக்கவில்லை என்று பாகிஸ்தான் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (எ)

### சீதனம் தடை

காத்மண்டு, மே. 21

நேபாளத்திலும் சீதனம் தடை செய்யப்பட்டுள்ளது. தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக அது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் அமுலுக்கு வந்துள்ள சமூக சீர்திருத்த சட்டத்தின்படி திருமணத்தில் சீதனம் பெறவும் கூடாது, கொடுக்கவும் கூடாது.

சீதனம்பெறுவோருக்குரூபா 12,000 முதல் 15,000 வரையான அபராதம் அல்லது மூன்று வருட சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும் என இச் சட்டம் கூறுகிறது. (க)

### ஹெக்டே தலைமையில் ஜனதாதள் போட்டி

பெங்களூர், மே 21

''வருகிற கர்நாடக சட்டசபைத்தேர்தலின்போது முன்னாள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே தலைமையில்தான் ஜனதாதள்போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### இந்தியர் வெளியேற்றம்

சிங்கப்பூர், மே 21

சிங்கப்பூரிலிருந்து ஆயிரத்துக்கு மேலான இந்தியர்கள் 18 ஆம் திகதி விமானமூலமும் கப்பல் மூலமும் வெளியேறிச் சென்றார்கள். சட்டவிரோதமாக சிங்கப்பூருக்கு வந்த தொழிலாளருக்கு எதிராக சிங்கப்பூர் அரசாங்கம் மேற்கொள்ளும் கடுமையான தண்டனைகளிலிருந்து தப்பவே அவர்கள் இவ்வாறு செய்துள்ளார்கள்.

இதுவரை சுமார் ஆயிரத்து அறுநூறு பேர் இவ்வாறு சிங்கப்பூரை விட்டு வெளியேறியுள்ளதாக அறிய வருகின்றது. (க)

### புளுதிப் புயலுக்கு இருவர் பலி

சென்னையில் ஏற்பட்ட புளுதிப் புயலில் 11 வயதான மஞ்சுளா என்ற சிறுமியும் நீலகண்டன் என்ற ஸ்கூட்டர் பயணி ஒருவரும் மரணமானார்கள்.

இந்தப் புளுதிப் புயலால் அடிக்கப்பட்டு பல குடிசைகளும் மரங்களும் விழுந்தன.

சிறுமி மஞ்சுளா படம் பார்த்துக் கொண்டிருந்த தியேட்டர் ஒன்றின் சிமேந்துக் சுவர் இடிந்து விழுந்தபோது அதில் சிக்குண்டு மரணமடைந்தனர். இதில் 30க்கு மேலானோர் காயமுற்றார்கள். (க)

# செயற்பாட்டில் பின்நிற்பதே சமய வீழ்ச்சிக்குக் காரணம்

### இந்து இளைஞர் மாநாட்டில் சுவாமிகள்

யாழ்ப்பாணம், மே 22

நாம் எந்நேரமும் சமய வளர்ச்சி விழிப்புணர்ச்சி என்று பேசுகிறோம். சிந்திக்கிறோம். ஆனால் செயற்பாட்டில் பின் நிற்கிறோம். ஏனைய சமயத்தவர்கள் காட்டும் செயல் திறன் எம்மிடம் ஏன் இல்லை.

இப்படிக் கேள்வி எழுப்பினார் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 10 ஆவது ஆண்டு மாநாடும், ஆய்வரங்கும் சனிக்கிழமை காலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகின அம்மாநாட்டில் கலந்து வாழ்த்துரை வழங்குகையில் சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவர் திரு. வே. கே. தனபாலன் கொடியேற்றி வைக்க, திருநெறிப் புரவலர் திரு. க. கனகராசா மங்கள விளக்கேற்றி வைக்க பண்ணிசையுடன் விழா ஆரம்பமானது.

விழா ஆரம்பத்தில் வன்செயல் சம்பவங்களில் மரணமானவர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட இளைஞர் பேரவை நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். பாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தியதை அடுத்து இலங்கை இந்து இளைஞர் பேரவைதுணைத் தலைவர் திரு.வ. முருகப்பன் தலைமையில் நடந்த விழாவில் சுவாமிகள் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''சமய வீழ்ச்சியின் அடிப்படைப் பிரச்சினையைப்பற்றி சிந்திக்காமல் பேசுகிறோம். செயற்பாட்டில் பின் நிற்கிறோம். இது தான் எமது வீழ்ச்சிக்குக் காரணம். ஆகவே தொண்டு உள்ளம் கொண்டு, சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டால் தான் விமோசனம் ஏற்படும்'' இப்படி அவர் கூறினார்.

தலைவர் திரு. முருகப்பன் பேசுகையில் கூறியதாவது;

மற்றச் சமயங்கள் பற்றிய விமர்சனங்களை விடுத்து எம் சமய வளர்ச்சி பற்றி சிந்தித்தால், செயற்பட்டால் எவரும் எம் சமயத்தில் ஊடுருவ முடியாது என்றார்.

ஆத்மஜோதி நா. முத்தையா பேசுகையில் கூறியதாவது:

பாடசாலைக்கு இந்து இளைஞர் பேரவைப் பிரதிநிதிகள் மாதத்தில் ஒருநாள் சென்று சகல மாணவர்களும் விபூதி தரிக்கிறார்களா? என்பதைப் பார்க்க வேண்டும். இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க. பரமேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

''நலிந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இந்து இளைஞர்களின் பணி அவசியம் தேவை. சகலரும் இணைந்து ஓர் அமைப்பாகச் செயல்பட வேண்டும். காலத்துக்கு ஏற்ப சைவச் சிறார்களுக்கு கல்வியுடன் தொழிற்கல்வியும் அளிக்கப்பட வேண்டும். இன்றைய மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் நியாயத்துடன் எதையும் எடுத்துக் கூறினால் அவர்கள் ஏற்பார்கள்'' இப்படி அவர் கூறினார். (ஒ-3)

### இந்து இளைஞர் மாநாட்டில் அவலக்குரல்

# வவுனியாவில் இந்துக்கள் மதமாற்றம் செய்யப்படுகிறார்கள்

## தடுத்து நிறுத்த உடன் பரிகாரம் தேவை

யாழ்ப்பாணம், மே 22

வவுனியாப் பிரதேசத்தில் எமது மதத்தைச் சேர்ந்தவர்களை இலட்சக் கணக்கில் செலவழித்து பிற மதத்தவர்கள் விலைக்கு வாங்கும் பரிதாப நிலை இன்று உள்ளது. இது உலகில் வாழும் 70 கோடி இந்து மக்களுக்கும் பெரும் இழுக்கைத் தேடித்தரும் விடயம். இது குறித்து கருத்துத் தெரிவித்துப் பயனில்லை. இதைத்தடுக்க பரிகாரம் தேடவேண்டியது சகல இந்துக்களினதும் கடமையாகும்.

இப்படிக் கூறினார் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் பேரவைத் தலைவரும், வட பிராந்திய தேசிய விவசாயிகள் சங்கத் தலைவருமான திரு. எஸ். கணபதிப்பிள்ளை. [illegible] பெற்ற இந்து இளைஞர் பேரவை [illegible]யில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆசை வார்த்தைகளைக் கூறி இலட்சக்கணக்கில் செலவிட்டு மதமாற்றம் தீவிரமாக நடைபெறுகிறது. இதைத் தடுத்து நிறுத்த வறுமையில் வாடும் இந்து மக்களுக்கு பணம் படைத்தவர்களும், நிறுவனங்களும் உதவ முன்வரவேண்டும் — இப்படி அவர் கூறினார். (ஒ-3)

### தனிச் சிங்களத்தில்

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விவசாய சேவை உத்தியோகத்தர்களை கிராமசேவை உத்தியோகத்தர்களாக மாற்றும் நியமனக் கடிதங்கள் முல்லைத்தீவுக் கச்சேரியிலிருந்து தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-92)

## மிருசுவில், உசன் பகுதியில் வெள்ளியன்று தேடுதல்

பச்சிலைப்பள்ளி, மே 22

வெள்ளிக்கிழமை காலை மிருசுவில், உசன், விடத்தற்பளை ஆகிய பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

இத் தேடுதலின் போது குண்டு வெடிப்புச் சத்தமும் துப்பாக்கிப் பிரயோகச் சத்தமும் கேட்டதாக அங்கிருந்து வந்த மக்கள் தெரிவித்தனர்.

இதனால் கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணம் சென்ற வாகனங்கள் யாவும் எழுதுமட்டுவாளில் மறித்து வைக்கப்பட்டு பளைக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

காலையில் யாழ்ப்பாணம் சென்ற (ஆழியவளை, கிளிநொச்சி) இருபஸ்களில் சென்ற பயணிகளும் பஸ் நடத்துனர்களும் கொடிகாமம் முகாம் முன்னால் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்ட பின் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனால் யாழ். நோக்கி வந்த அனேக வாகனங்கள் பளையில் தரித்து நின்றன.

பளை நகரப் பகுதியில் வாகனங்களும் பயணிகளும் நிறைந்து காணப்பட்டனர். (ஒ-117)

### மோதல்

யாழ்ப்பாணம், மே 22

சுதுமலைபகுதியில் சனியன்று மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

பிற்பகல் 5-30 மணியளவில் சுதுமலை அம்மன் கோவிலை அண்மித்த பகுதியிலேயே இந்த மோதல் இடம் பெற்றது.

சேத விவரம் தெரியதல்லை.

அமைதிப்படையினர் இப்பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதலில்ஈடுபட்டனர். [ஒ-9]

### சரத்துக்கு அஞ்சலி

''வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட ஒரு மாநில அரசியல் அமைப்பை உருவாக்க அமரர் சரத்முத்தேட்டுவகம பாராளுமன்றத்திலும், வெளியிலும் குரல் எழுப்பினார்.

இப்படிக் கூறினார் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. எஸ். குகதாஸ். அமரர் சரத்முத்தெட்டுவகமவின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. டொமினிக் ஜீவா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. (க)

## மூதூருடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிப்பு

யாழ்ப்பாணம், மே 22

மூதூரில் கடந்த புதன்கிழமை இரவு நடந்த தமிழ்-முஸ்லிம் மக்கள் கோஷ்டி மோதல்களை அடுத்து பெரும் பதற்றம் நிலவுகிறது. தொடர்ந்து ஊரடங்கு அமுல் செய்யப்பட்டுள்ளது.

மூதூருக்கும் திருகோணமலைக்கும் இடையில் இடம்பெறும் படகு சேவைகள் இடம்பெறுகதால் மூதூருக்கும் மற்ற இடங்களுக்குமான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை இரவு ஒரு கோஷ்டியைச் சேர்ந்த இளைஞன் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து அடுத்த தரப்பாரைச் சேர்ந்த மக்களில் சுமார் 10 பேர் வாளால் வெட்டப்பட்டதாகவும், அதில் 3 அல்லது 4 பேர் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இரு பகுதியினரின் வீடுகளுக்கு கல் எறியப்பட்டதாகவும், பலர் தாக்கப்பட்டதாகவும் தெரிய வந்தது.

அங்கு ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நெல்லிக்,காய்த்தைலம்
(பிருங்க மலாதித்தைலம்)

இத்தைலம் அனேக மருந்துகளை[illegible]க் கொண்டு தயாரிக்கப்பட்டது. இத்[illegible]தைலம் சிரசில் தேய்த்துவந்தால் கண்எரி[illegible]சல், கண் பார்வைக்குறைவு, கண் பூ[illegible]ளசாறல், கண்ணீர்வடிதல், தலைஇ[illegible], தலைமயக்கம் போன்ற சிரசு ரோகங்[illegible]களைக் குணப்படுத்தி முடியையும் வளரச் செய்யும்.

¼ போ[illegible]த்தல் விலை 25/-

கிடைக்[illegible]ம் இடம்:
க. செ[illegible]. கைலாசம்பிள்ளை & சன்ஸ்
76, பெரியகடை யாழ்ப்பாணம்.



# உதயன்

22 - 05 - 1989 திங்கட்கிழமை



## நன்னாரி சர்பத்

இது தேக குளிர்ச்சிக்கும் நரம்புத் தளர்ச்சிக்கும் மூல வருத்தத்துக்கும் சலக்கடுப்புக்கும் உஷ்ணச்சூட்டுக்கும் தாகசாந்திக்கும் பாவிக்கச் சிறந்தது.

1 போத்தல் விலை 30/-
வியாபாரிகளுக்கு விசேட சழிவு வழங்கப்படும்.

கிடைக்கும் இடம்:-
க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்.
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## வாதுவையில் இருமுகாம்கள் பொலீஸாரால் முற்றுகை!

கொழும்பு, மே 22

பாணந்துறை பொலீஸ் பகுதியில் இரண்டு தீவிரவாத முகாம்களை பொலீஸார் முற்றுகையிட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தேடுதலின்போது கைது செய்யப்பட்ட 9 தீவிரவாத சந்தேக நபர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்தே இம்முகாம்கள் முற்றுகையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வாதுவையில் இம்முகாம்கள் இருந்தன.

ஒரு முகாமில் கிரனேட்டுக்களை தயாரிக்கும் வேலை இடம்பெற்று வந்ததாகவும், இரண்டாவது முகாமில் பொலீஸாரின் வானொலித் தகவல்களை இடைமறித்துக் கேட்கும் தகவல் பிரிவு அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பாணந்துறை பொலீஸ் பிரிவில் இடம்பெற்ற 20 கொலைகள் இம்முகாம்களைச் சேர்ந்தவர்களால் நிறைவேற்றப்பட்டது என்று கூறப்பட்டத.

[ஒ-எ]

## மூதூர், சம்மாந்துறையில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

திருகோணமலை, மே 22

மூதூரிலும், சம்மாந்துறையிலும் அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடி நஷ்டஈடு வழங்குமாறு வடகிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஈமக்கிரியைச் செலவாக 3 ஆயிரம் ரூபாவை உடன் வழங்குமாறும் அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு உரிய நிவாரண உதவியை வழங்குமாறும் முதலமைச்சர் பணித்துள்ளார்.

வட-கிழக்குமாகாண எதிர்க்கட்சித் தலைவர் ஜனுப் எம். எச். சேகு குஸ்ஸதீன், திருமலை மாவட்ட உறுப்பினர் ஜனுப் ஜவாட் மரிக்கார் ஆகியோர் முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியதை அடுத்தே முதல்வர் மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

(ஒ-150]

## தெற்கில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள்

கொழும்பு, மே 22

தென்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின் தொகுப்பு வருமாறு:

கடந்த வியாழன் ஊறுபொக்க என்னும் இடத்தில் காலையில் பொலீஸ்-ராணுவ கூட்டு ரோந்தில் ஈடுபட்ட வாகனங்கள் நிலக்கண்ணி வெடியில் சிக்கிக் கொண்டன.

நீதிமன்றத்திற்கு தீவிரவாத சந்தேகநபர் ஒருவரைப் பாதுகாப்புப் படையினர் கூட்டிச்சென்ற போதுதான் இத்தாக்குதல் இடம்பெற்றது. உயிரிழப்பு இடம்பெறவில்லை.

கெக்கிராவ, தம்புத்தேகம பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கொலைகளுக்கு தேசப்பிரேமி பிக்கு சன்விதானய அமைப்பு உரிமை கோரியது.

சடலங்களில் வெட்டுக் காயங்கள் இருந்தன.

குளியாப்பிட்டி பஸாரில் உள்ள உணவு விடுதி ஒன்றில் வைத்து கடந்த வியாழன் அதிகாலை என். சரத் பீரிஸ் என்பவர் கொல்லப்பட்டார்.

பொலன்னறுவ பொலீஸ் பகுதியில் பக்கமூன மற்றும் அனுராதபுரம் மாவட்டம் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலின் போது பாதுகாப்புப் படையினர் 72 பேரை சந்தேகத்தின் மீது கைதுசெய்தனர்.

காவத்தை என்னும் இடத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த கணவனும் மனைவியும் இனந்தெரியாத நபர்களால் வழிமறிக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சிலாபம் பொலீஸ் பகுதியில் ஹெட்டிப்பொல என்னுமிடத்தில் ஐக்கிய சோஷலிஸ அணி ஆதரவாளர் ஒருவரும் குட்டிகல என்னும் இடத்தில் ஐ. தே. க. ஆதரவாளர் ஒருவரும் துப்பாக்கி மனிதர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

வெலிகம என்னும் இடத்தில் சனிக்கிழமை மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(ஒ-எ)

## ஜொலிஸ்ரார்ஸ்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றனர்.

பந்துவீச்சில் சுபதாஸ், நவின்ராஜ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், சிறீதரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய கிராஸ்கொப்பர்ஸ் அணி 22.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

தர்மராஜா 14ஓட்டங்களைப் பெற்றார்.

அபாரமாகப் பந்து வீசிய விவேகானந்தன் 6ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். முகுந்தன் 3 விக்கெட்டுகளையும், சண்முகலிங்கம், ரஜீவன், பாலகுமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

[இ-6]

## இந்து கலாசார பிரசார நிலையம் அமைப்பதின் அவசியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 22

இலங்கையில் உள்ள சகல இந்து மக்களினதும் இன்னல்கள், பிரச்சினைகள் ஆகியவற்றை உலகம் முழுவதும் பிரசாரம் செய்யும் வகையில் இந்து கலாசார பிரசார நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் வருடாந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின் போது கலந்து கொண்ட பல பிரதிநிதிகளும் இக்கருத்தை வலியுறுத்தினார்கள்.

இலங்கையில் யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்பு, திருமலை, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களில் இந்துக்கள் வாழ்ந்தபோதும் இந்துக்களுக்கு என்று ஒரு கலாசார நிலையம் இன்னும் இல்லை.

கொழும்பில் இவ்வாறான ஒரு நிலையத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இந்து மாமன்றத்தின் ஆதரவு இல்லாததால் நடைபெறவில்லை.

திருமலையில்தான் கலாசார நிலையம் அமைய வேண்டும். ஆனால் தற்போதைய நிலையில் அங்கு அமைக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் விரைவில் அமைக்கப்பட வேண்டும். கருத்தரங்கு மண்டபம், வெளியூர் இந்துக்கள் வந்து தங்கக்கூடிய மண்டபம் ஆகியன கொண்டு அது அமைக்கப்பட வேண்டும்.

திரு ஐ. தி. சம்பந்தன், திரு. செந்தூர்ராசா, திரு. எஸ். பாலசிங்கம் உட்படப் பலரும் இக்கருத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

[அ-3]

## கப்பலில் "சிலிண்டர்" வெடித்து வல்வைவாசி உயிரிழப்பு!

வடமராட்சி, மே 22

சவூதி அரேபியா கம்பனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் 'பம்பராக' வேலை பார்த்துவந்த வல்வை வாசி ஒருவர் விபத்து ஒன்றில் மரணமானார்.

மரணமானவர் வல்வெட்டித்துறை, மானாங்கனையைச் சேர்ந்த முத்துக்குமாரு ரஞ்சன் (வயது 34)என்பவராவர்.

கப்பலில் வேலை செய்து கொண்டிருந்தபோது ''காஸ் சிலிண்டர்'' வெடித்து விபத்து ஏற்பட்டதாலேயே மரணம் சம்பவித்ததாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தின்போது இரு எதியோப்பிய நாட்டுப் பிரசைகளும் பலியானதாகக் கூறப்பட்டது.

(ஒ-160)

## வரணிப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்துவருகின்றனர்

வடமராட்சி, மே 22

வரணி, எருவன் பகுதிகளில் இருந்து மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதிக்கு வருகின்றனர்.

இப்பகுதிகளில் பரவலாக மக்கள் தாக்கப்படுவதாலேயே இடம் பெயர வேண்டியுள்ளதாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வரணியில் சிலர் தாக்குதலுக்கு உள்ளானார்கள் எனத் தெரிய வருகிறது.

காயமடைந்தோர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:

பரமசிவன் கருணாகரன் [வயது 15], கணபதி சண்முகலிங்கம் [வயது 30], வைரவன் குலசிங்கம் [வயது 28], எஸ். சின்னராசா (வயது 45), சுப்பிரமணியம் இராசேந்திரம் (வயது 22), எஸ். அருளானந்தன் [வயது 44].

(ஒ-160)

## பல்கலைக்கழக--- --

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

துறை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரை விடுவிக்க பல்கலைக்கழக மாணவர் சங்கங்களும் நிர்வாகமும் பலத்த முயற்சியை மேற்கொண்டிருந்தன.

நேற்று மாலை 6 மணிக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் பிரஸ்தாப மாணவரின் தாயார் ஆகியோர் முன்னிலையில் ஜெகதீஸ்வரன் விடுவிக்கப்பட்டார்.

(அ-9)

## தமிழில் வேண்டும் அர்ச்சனை

யாழ்ப்பாணம், மே 22

மக்கள் விளங்கத்தக்க வகையில் ஆலயங்களில் தமிழில் அர்ச்சனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இக் கோரிக்கையை விடுத்தார் ஆசிரியர் சந்திரசேகரம்.

இலங்கை இந்து இளைஞர் பேரவை 10 ஆவது மாநாட்டில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மற்றும் பலரும் இக்கோரிக்கையை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தார்கள்.

(அ-3)

## கம்பியூட்டர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 22

கம்பியூட்டர்களைபயன்படுத்துதல் தொடர்பான விரிவுரையும் கலந்துரையாடலும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் யாழ். நிலையம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

(இ)

## இந்தியப்------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளை அறிக்கை வடிவத்தில் வெளியிட்டார்.

ஆக்கிரமிப்புப் படையாக உள்ள இந்திய அமைதிப் படையை நாட்டை விட்டு வெளியேற்ற மக்கள் ஜே. வி. பிக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இப்படி இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

கடந்த வாரம் திருமலை இறங்குதுறையில் நிலக்கண்ணி வெடித் தாக்குதல் நடத்தி 13 இந்திய அமைதிப் படையினரைக் கொன்றதற்காக தேசபக்தி மக்கள் முன்னணி (கிழக்கு மாகாணம்)யின் வட பிராந்திய அமைப்புக்கு அறிக்கையில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-எ)

## தங்கக்கடத்தல் முறியடிப்பில் சுங்கப் பகுதியின் சாதனை!

கொழும்பு மே 22

இலங்கை சுங்கப் பகுதியின் வரலாற்றில் ஒரு சாதனை எனக் கூறக் கூடிய அளவில் இவ்வாண்டு ஜனவரி மாதம் வரை 8009 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சுங்கப் பகுதியின் தடைப் பிரிவு மட்டும் 40 கிலோ உடைய 350 தங்கப் பாளங்களை இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களில் கைப்பற்றியுள்ளது. இதன் பெறுமதி 1 கோடியே80 இலட்சம் ரூபாவாகும்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெரும்பகுதி சிங்கப்பூரில் இருந்து இங்கு கடத்திக் கொண்டுவரப்பட்டவையாகும்.

கடத்தல் காரர்கள் சிங்கப்பூரிலிருந்து தங்கத்தை இலங்கைக்கு கடத்தி வந்த பின்பு இந்தியாவுக்கு கடத்திச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

சுங்கப்பகுதியினரின் தீவிர நடவடிக்கை காரணமாக கொழும்பில் ஒரு பவுணின் விலைரூபா நாலாயிரத்திலிருந்து ரூபா நாலாயிரத்து 400ஆகத் திடீரென உயர்ந்துள்ளது என்று கூறப்படுகிறது.

]ஒ-ச]

## மதுபான நிலையங்களில் கொள்ளை

நுவரெலியா, மே 22

நுவரெலியாப்பகுதிகளில் மதுபான விற்பனை நிலையங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

நுவரெலியா,ராகலை,ரதல்லை ஆகிய இடங்களிலுள்ளசாராயத் தவறணைகளில் பல லட்சம் ரூபா பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கொல்லையை அடுத்துள்ளமராயா லிந்துல ஆகிய இடங்களில் உள்ள மதுபான சாலைகளிலும் பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

கடைசியாக அட்டனை அடுத்துள்ள கொட்டகலை, போகாவத்தை, பத்தனை ஆகிய இடங்களிலுள்ள சாராயத்தவறணைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க, மதுபானம் விற்பனை செய்வது தடைசெய்யப்பட உள்ளதாக தேசப்பிரேமி இயக்கத்தின் பெயரில் துண்டுப்பிரசுரங்கள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

[இ-6]

## மக்கள் முறைப்பாடுகளை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

திரு: கமகே அனுப்பிய சுற்று நிருபத்தில், பொது மக்களின் குறைபாடுகளை ஏற்றுக் கொள்ளவும், கையாளவும், தீர்த்து வைக்கவும் பின்வரும் வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

★ எழுத்தில் பெறப்பட்ட முறைப்பாடு ஒவ்வொன்றும் பெறப்பட்டவுடன் அது பெற்றுக் கொண்டமை பற்றி அறிவித்தல் வேண்டும்.

★ முறைப்பாடுகளைப் பரிசிலனை செய்வதற்காக குறிப்பிட்ட குழு வாரந்தோறும் கூடுதல் வேண்டும்.

★ முறைப்பாடுகளைத் தீர்த்து வைத்தல் நிறுவனத் தலைவரின் அதிகாரத்திற்குட்பட்டதும் தீர்வு செய்தல் நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் அல்லது சாத்தியத் தகவுடையதாகவும் இருக்குமிடத்து அந்த முறைப்பாடுகள் தீர்வுசெய்யப்பட்டு அவற்றிற்குப் பதில் அளிக்க வேண்டும்.

★ இல்[illegible] சாத்தியமற்றதாக விருந்தால் நிலைமை முறைப்பாட்டாளருக்கு எழுத்தில் விளக்கப்படல் வேண்டும்,

★ தேவைப்படின் பொது மக்களின் முறைப்பாடுகளைத் தீர்வு செய்வதற்காக வெளிக்கள விஜயங்களையும், பரிசோதனைகளையும் இணைத்து தீர்வை மேற்கொள்ளவேண்டும்.

★ இரண்டு வாரகாலப் பகுதிக்குள் இவ்வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

★ வாரந்தோறும் புதன்கிழமை பொதுமக்கள் தினமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. இத்தினத்தில் பொதுமக்கள் தங்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்க அலுவலகத்திற்குச் சென்று முறைப்படலாம்.

★ சகல அரசாங்க அலுவலகங்களிலும் முறைப்பாடுகள் செய்வதற்கென ஒரு பெட்டி முக்கியமான ஓர் இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

(அ-7)

## சோவியத் — பிரிட்டிஷ் ராஜீக நெருக்கடி!

லண்டன், மே 22

சோவியத் யூனியனுக்கும் பிரிட்டனுக்கும் இடையே ராஜீக நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது.

லண்டனில் வேலை செய்து வரும் 11சோவியத் பிரசைகளை நாட்டை விட்டு வெளியேறும்படி பிரிட்டிஷ் அரசு உத்தரவிட்டது. இவர்களில் 3 பேர் சோவியத் பத்திரிகையாளர்கள்:

அதற்குப் பதிலாக, சோவியத் யூனியன் அரசும் பதினொரு பிரசைகளை மாஸ்கோவை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டிருக்கிறது. மாஸ்கோவில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் திரு. ஜேர்மி ஹறிஸும் இவர்களில் ஒருவர். லண்டன் பத்திரிகையாளர்கள் இருவரும் இதில் அடங்குகின்றனர்.

இரண்டு வாரங்களில் நாட்டை விட்டு வெளியேறும்படி இரண்டு நாடுகளின் அரசுகளும் சம்பந்தப்பட்டோருக்கு உத்தரவிட்டிருக்கின்றன.

லண்டனில் உள்ள சோவியத் பிரசைகள் உளவு வேலைகளில் ஈடுபட்டதனால்தான் வெளியேற்றப்படுகின்றனர் என்று பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

(அ-எ)

## சீன இராணுவத்தினர் நகருக்குள் புக முடியாதநிலை

பீகிங், மே 22

சீன இராணுவத்தினர் பீகிங் நகருக்குள் நுழைய முடியாத நிலையில் நகருக்கு வெளியே நிற்பதாக பீகிங் தொலைக்காட்சி நேற்று அறிவித்தது.

இதனிடையில் ஷாங்காயிலும் மாணவருக்கு ஆதரவாக லட்சக்கணக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஹொங்கொங்கிலும் மாணவர் ஆதரவு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

''சீனப் பிரதமர் லீபெங் வீழ்க'' என்ற கோஷங்கள் நேற்று முதல் தடவையாக ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

பிரதமர் லீபெங் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று மாணவர்கள் கோரியிருக்கின்றனர்.

[ஒ-எ]

## இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாண கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

திறப்புவிழாவுக்கு கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராஜா தலைமை வகிப்பார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள உள்ளார்.

(அ-9)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 22

ஷப்ரூ நிதி நிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன.

காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் சென்றலைட் (நீல) அணியை எதிர்த்து ஷப்ரூ அணியும்-

மாலை நடைபெறும் ஆட்டந்தில் கொக்குவில் சனசமூக நிலைய அணியை எதிர்த்து சென்றலைட் (சொக்) அணியும் மோதுகின்றன

(ஒ-6)

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் நாகையா கண்ணன்

செல்வன் நாகையா கண்ணன் காலமாகிவிட்டார். இவர் வேலணை மேற்கு காலஞ்சென்ற காலி பிரபல வர்த்தகர் சே. க. நாகையா–கனகம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரரும், கந்தவேள் (கனடா), விசாகன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுலோசனா, இராசேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், பார்திபன், பகீரதன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், ஜானகி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவர்.

ஈமக்கிரியைகள் 22-05-1989 திங்கட்கிழமை அன்னாரது 'மலரகம்' இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10-00 மணிக்கு அம்பலவி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சே. க. நாகலிங்கம்

''மலரகம்'',
வேலணை மேற்கு,
வேலணை - 8.

[11020]

### திருமதி ஞானப்பு மைக்கேல்

திருமதி ஞானப்பு மைக்கேல் 21-05-89-ல் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற திரு. இறகரி மைக்கேலின் அன்புமனைவியும், ஸ்ரீபன் ஜோட்ஸ் (இத்தாலி) கருணாநிதி (உரிமையாளர் ஸ்ரீபன் வெல்டிங், சாவகச்சேரி) காலம்சென்ற ஜீவானந்தம், றஜனி, பிறேமலா (கனடா) வெனிசியா ஆகியோரின் அன்புத் தாயும் அமலதாஸ், (கச்சேரி முல்லைத்தீவு) அன்ரன், (கனடா) ஞானசேகரம், (குவைத்) மேரி அக்னஸ், வசந்தா ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-05-89 இன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

ஆனைக்கோட்டை
(651)

தகவல் :
அ. உதயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 22—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது